180520

# வில்வாரண்ய மான்மியம்
# என்னும்
# காட்டூர்த் தலபுராணம்

O23'38.2114
N27
180520

193



5 JUN 1929
MADRAS

வில்வாரண்ய மான்மியம் என்னும்

# காட்டூர்த் தலபுராணம்.

இஃது

திருவாரூர் மான்மியம் நாகரகாண்டத்திலிருந்தும்,

திருவாரூர்த் தல புராணத்திலிருந்தும்

கூடைநாடு வித்வான்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மு. இரத்தின தேசிகரவர்களால்

பரிசோதித்தெடுத்து

திருவாரூர்

மகா-ள-ள-ஸ்ரீ ச. நாகலிங்க முதலியாரவர்களால்

விஜயபுரம் கருணாநிதி பிரசில்

பதிப்பிக்கப்பெற்றது.

1929.

சிவகணபதி துணை.

## காட்டூர் எனவழங்கும்

# வில்வாரண்ய மான்மியம்

OFFICE OF THE REGISTRAR
No.
5- JUN 1929
MADRAS

வெண்பா.

காட்டேர்ப் புராணகதை கழறுதற்குக் கார்தவழும்
காட்டேர்வா ழானைமுகன் காப்பாமே—யீட்டிபுக
சாத்திரமு மாலயமுஞ் சார்ந்த திருப்பணியும்
சேர்த்திருத்தஞ் செய்யுந் திரு.

விருத்தம்.

நிலவிய திருவா ரூரில் நீடிய அநேக கோடி
அலகிலாச் சீவர் வந்து அருள்பெற்று உய்ந்த துண்டு
திலகமாம் அயோத்தி தன்னில் திருவருள் பெற்றுவாழ்ந்து
பலகலை கற்றுதேர்ந்து பசுபதி பூசைசெய்தார்.

நமது பூர்வ ஆரூராகிய ஆடகக்ஷேத்திரமும், ஆன்மபுரியும், ஆனந்தகானமும், சாந்தஸ்திதமும், கலா நிலையமும், சமத்கார புரியும், சதானந்தஸ்திதமும், நாராயணபுரியும், லெக்ஷ்மிஸ்தானமும், சாரதா ஹிருதயமும், சாந்திகலாபுரியும், முசுகுந்தபுரியும், விடங்க புரியும், மூலட்டான புரியும், கிருபா லோகமும், நைமிசசேதன புரியும், கமலாநந்தர் வாசஸ்திதமும், இன்னும் பல திவ்ய நாமங்களையுடையதாய் காமாடம்பரபுரியென்றும் வழங்கி வருகின்ற நம் திருவாரூரில் அநேகர்கள் முற்காலத்து வந்து முறைமுறை பூசித்து இறையருள்பெற்று உரைந்தனராக. அவற்றுள் சில தெரிந்தவாறு எழுதுகின்றோம் :—அகில காரண நாராயண ஹிர்தய கமல பூஜித சேவித லெக்ஷ்மீ ஜீவன சரஸீ பிரயோஜன சுந்தர விடங்க ஸ்ரீ தியாகராஜப் பெருமான் எழுந்தருளியிருந்து அநேக ஜீவ கோடிகட்கும் அருண்மாரி பொழிகின்றாரென்பது கோள்வியுற்ற அந்தண கோடிகள் அநேகர், அருமறை யோகியர் அநேகர், கெந்தர்வ, சித்தர்கள் அநேகர், அரக்கர்கள் அனந்தம், அசுரர்கள் பற்பலர், அரசர்களான சூரிய சோமாக்கினி வம்சத்தவர்களாகிய மகாராஜாக்கள் பலரானும் சிறந்த சூர்யகுல திலகனான முசுகுந்த மகாராஜாவினால் இந்தத் திருவாரூரிலிபற்றிய ஆடல்கள் அனந்தம்.

அவற்றுள்ளும் அந்தப் பரம்பரையில் தோன்றிய திரிசங்கு, ஹரிச்சந்திரன், நளன், புரூரவன், தசரதன், ஸ்ரீராமன், குசன், லவன் இவர்கள் எல்லாம் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு இங்கு வந்து தாங்கள் தாங்கள் ஒவ்வொரு புண்ணியத்தானம் அமைத்ததுண்டு. அதனினும் மிக்க புண்ணிய சீலர்கள் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்தால் தனித்தனி ஆச்சிரமம் வகுத்துக்கொண்டு இந்தத் திருவாரூருக்குத் தென்றிசை, வடதிசை, கீழ்த்திசை, மேற்றிசை நான்கு பக்கங்களிலும் தங்கியிருந்து பிறகு திருவாரூர் வந்து தேவதீர்த்த ஸ்நானமும், வன்மீகலிங்க பூஜையும் இயற்றிவித்து தங்கள் ஆச்சிரமம் போவார்கள். அப்படிச் செல்லுகின்றவர்கள் தங்கள் இஷ்ட வர பூர்த்தியானபிறகு நாடு செல்லுங்கால் அவரவர்கள் ஆச்சிரமத்தின் கண்ணே சிறிய சிவலிங்க ஸ்தாபனமும், சிற்சில மண்டபாலயங்களும், தங்களாத்மார்த்த பூஜாஸ்தாபனமும், அதற்கான தீர்த்தங்களும், அஃதிலியற்றும் தானதி வினியோகங்களும், திதிவார நட்சத்ர குறிப்புகளும், இயன்றவர்கள் எய்தும் பிரயோசனங்களும் சொல்லிவைத்துச் செல்கின்றனர். அஃதவ்வண்ணமிருக்க,

இன்னும் இந்தத் திருவாரூருக்கு பச்சிம பாகத்தில் விளங்குகின்ற வில்வாரண்யமென்னும் காட்டூர் ஒன்றுண்டு. அந்தக்காட்டூர் என்பது பெருமான் திருவருள் கூடுவதற்கு வழி காட்டூராகும். இத்தகைய காட்டூரை வடமொழியார், ஆரண்ணியபுரியென்று கூறுவர். இவ்வூரில் உள்ள ஆலயங்களோ கணக்கிறந்தனவாகும். அது இப்போது திடர்களினும், வயல்களினும், மாத்தின்மூல்களினும் சிவலிங்க வனமாகவே காணுகின்றன. அல்லாமலும், மண்ணின் கீழ் நிலயங்களினும் அகப்படுகின்ற மூர்த்திகளும், பூசைக்கான சாமான்களும் எண்ணிறந்தனவாகும். இதற்கு காரணம் நமது திருவாரூரில் சிலகாலத்திற்கு முன் குலபூஷணச் சோழமகாராசா காலத்தில் பௌத்தர்கள் அதிகம்; மிகவல்லபர்கள். எப்படியோ அரசனை வசியம்பண்ணிக்கொண்டு தங்களுக்கு நாடு, வீடு, மானியங்கள் பூரணமாகப்பெற்றுக்கொண்டு வாழ்ந்தோராயிருந்தார்கள். அதற்கு சாக்ஷியாக இப்பொழுதும் இவ்வூர் மருங்கில், பவித்திரமாணிக்கம் என்று பெயர் வழங்குமூர் பௌத்தர் மானியமாகும். காலவேறு பாட்டினால் மாறிவழங்குகின்றது.



இதற்கு புராணசாக்ஷி எது வென்றால் பத்திச்சுவை நனி சொட்டப்பாடிய பாவலர் வலவனாகிய நமது சேக்கிழார் பெருந்தகை சொல்லியருளிய பெரியபுராணத்தில் திருவாரூர் தண்டியடிகள். புராணத்தில் இந்த நாயன்மார் கமலாலயக்குளம் சமணர்களால் தூர்ந்து மேடாய்விடுகிறது என்று க்ஷேத்திரவாசி சொல்லக் கேட்டு மிகுதியான துக்கமும், அந்த தீர்த்தம் பூர்வத்தில் எவ்வளவு அகல-நீகள முள்ளதோ அந்தப்படி நாம் வகுக்கவேண்டுமென்று வன்மீகநாதரைப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு அன்று முதல் குளம்வெட்ட முயன்று தினந்தினம் விடாமுயற்சி கொண்டு முடித்து வருகிறார். அக்காலம் தடாகக்கரையில் வீடு கட்டிக் கொண்டிருந்தவர்களாகிய சமணர்கள் கண்டு தங்கள் கட்டிடம் இடிந்து விடுகிறது என்று சினங்கொண்டு இவரைக் கையாற்றளியும், மண்வெட்டி கூடையைப்பறித்தெரிந்தும் வன்மை புரிந்தார்கள் பெரியவர் பொறாராகி ஸ்ரீ தியாகராஜப் பெருமானை வேண்டிச் சொல்லிக்கொள்ள, சொப்பனத்தில் சுவாமியார் எழுந்தருளி அன்பனே உமது மனக்குறை முடிக்கின்றேன் என்று அருளிச் செய்து, அந்த இரவே அரசனிடம் சென்று ராஜனே என் சொற்படி குளம்வெட்டுகின்றான் அன்பனான தண்டியடிகள் என்பவன். அவனை மிண்டு செய்கின்றார்கள், நகரவாசிகளான புத்தவிரோதிகள். ஆகையால் அவர்களை நீயழைத்து நம்முண்மையை அறிவித்து அவர்களது பொய்யை நீ தெரிந்து கொண்டு, தண்டியடிகளார் சொற்படி ஊரோட்டி விடுவதோடுங்கூட, அவரது ஆலயங்களும், வீடுகளும் கொணர்ந்து நமது குளத்திற்கு படித்துறை முதலிய அங்கங்களாக நிறைத்து முடிப்பாயாக வென்றார். அரசனும் திருவருளுத்தரவின்படி மானியம், விருதுகள் முழுவதுங்கவர்ந்து அவர்களைத்துரந்தனனாக. அதுவே இதற்கு நிறைந்த அத்தாக்ஷியாய் நிற்கின்றன. பற்பல அடையாளங்களும், புராணக்கதைகளும் நிறைந்திருக்கின்றன.

இன்னும் முன்னொரு காலத்தில் நைமிசாரண்ணியத்தில் நாரத பிர்மம், தூறுவாச மூர்த்தி, சூதபுராணிக மகாரிஷி, அத்திரி, பாராசரர், சனகாதி முனிவர்கள், யோகீசுவரர்கள், கெந்தருவ, சித்தர்கள், கெருட, கிந்நரியாவர்களும் ஒருங்கு சேர்ந்து அமர்ந்தனர். அப்போது புராணிகராகிய சூதரிஷியைப்

பார்த்து திவ்விய கதாமிர்தமொன்றருளிச்செய்க வென்று பணிந்து கேட்டனர். உடனே மகரிஷியானவர் தெற்கு நோக்கித்தெண்டம் சமர்ப்பித்து கிழக்கு முகமாக விருந்து தபோ நிதிகளே! நான் சிலனாட்களுக்கு முன் தென் பொதிகைக்குச்சென்றேன். ஆங்கு குறுமுனியினிடத்தில் சிற்சில தமிழிலக்கணச் சந்தேகந்தீர்ந்து பிறகு அவர்களும், நானும் தென்றிருவாரூர் தியாகப்பெருமானைத் தரிசித்து அவ்வாலயத்துள்ள ஆயிரக்கால் மண்டபத் தமர்ந்தேதம். அப்போது ஆங்கு அடியார்கள் நிரம்பக் கூடினர். பக்ஷிஜாலங்கள் பாடுவதெல்லாம் திருநெறித் தமிழாகவும், கேட்கு மோசைக ளெல்லாம் வேதங்களாகவும், பேசுவதெல்லாம் சிவசரிதையாகவும், செய்யுங்காரியமெல்லாம் சிவபூசையாகவுமிருந்தன. அதுநோக்கி குருஸ்வாமிகளாகிய அகத்தியர் மிகமகிழ்ந்து இருந்தனர். யான் யிங்கு சிலகாலம் வசிக்கவேண்டுமென்று நினைந்தேன். அதுபோல் ஒரு புண்ணிய சீலன் விரைந்து வந்து தொழுது யாவரும் எனது கிரகத்திற்கு எழுந்தருள்க என்று கேட்டுக்கொண்டு நின்றனர். அந்த நல்லவரைப்பார்த்து நீங்கள்யாவர் எங்களை எனழைக்கின்றீர் என்றேன். உடனே அவர்பணிந்தெழுந்து ஆரண்ணிய புரிவாசி யென்றார். மகரிஷி அது யாங்குளது என்றார். அதன் பெருமை கூறுகின்றேன், செவி கொடுத்தருள வேண்டுமென்றார். உடனே சொல்லுகின்றனர்.

1. கமலைக்கு மேற்றிசையில் காட்டூரென் றுள்ளதொரு கடவுட்டானம்
அமலைக்கு மாலுக்கு மதுதான மாவதுமேல அனகதீர்த்தம்
விமலைக்கு நாயகனும் விசுவேச னமர்ந்திருக்கும் விரும்புவோர்கள்
சுமலைக்குச் சுகஞ்செய்து சொல்லியநல் யாங்களெல்லாம் தோற்றுந்
[தானே.

2. சோமவார மூழ்கினோர்க்குச் சொல்லொணாத வரமெலாம்
காமமாதி பொருளுமுண்டு கதியுமுண்டு விதியெலாம்
போமனாதி புகழ்புரிந்து பூசைசெய்யி லங்கவர்க்குத்
தாமனாதி நினைவுதந்து தானும்வந்து நிற்பரே.

3. குவலயம் புகழுங் காட்டூர்க் குசதீர்த்தம் விசுவமூர்த்தி
பவமற விருப்பர்வந்து பார்க்கலாம் பார்த்தபின்பு
தவவரு மடியேன் சிற்றில் தகைந்துபோ சனமுஞ் செய்து
சிவன்றரு விபூதிதந்து செல்லலாம் வருகவென்றார்.

180520



கேட்டு மகிழ்ந்து தமது ஆச்சிரமம் யாதென்றதும், இல்லற மென்றார். திரு மரபு யாதெனலும், முதன்மையார் செங்குந்த மென்றார். சொன்னவுடன் மகிழ்ந்து தனது குருநாத சுவாமிகளை அவர்களது விசேடங் கூறுக என்றனர். உடனே குறுமுனிவர் சூதானவரைப்பார்த்து இவர்கள் எனது எஜமானராகிய குமாரக் கடவுள், ஸ்ரீ சுப்ரமணிய ஸ்வாமிகளது சுக சகோதர சந்ததிக ளாவார்கள். எப்படியெனில் கைலாசத்தில் சிவபெருமானிடத்தில் ஞானமூர்த்தியாய் தோன்றிய ஸ்ரீ சண்முகக் கடவுள் சூர சங்காரக் காரியந்தொடங்குங்கால், இந்திராணி முதலிய சகல தேவஸ்திரீ களெல்லாம் ஒருங்கு வந்து எ சண்முகத் தெய்வமே யாமெல்லாம் சுமங்கலையாகவே வாழும்பொருட்டு மாங்கல்லிய பிக்ஷைதரவேண்டு மென்றார்கள். உடன் அப் பெண்கள் பார்த்திருக்கும்போதே தமது இளைஞர்களாகிய இயல்வீரர்களை அழைத்து தன்னிடமிருந்த குந்தமென்னும் ஆயுதங்கொடுத்து, இதனாலே இப்பெண்களுடைய கணவர்களைக்கொல்ல வருகின்ற சூரபன்மாவின் சைன்னியங்களாகிய அரக்கர்களைக் கொன்று குவித்து இவரது தாலி காப்பாற்றுவீராக என்றனர். அவ்விதமே இருகையேற்று வாங்கி பகை முடித்து இவர் கழுத்தணி காப்பாற்றி வருகின்றனர். இவைகளேயல்லா மலும், சிவயோகிகளும், ஞானிகளும் உணவுகொள்ளுதற்கு இவர்க ளது இல்லம் ஓரிடமாகும். அன்றியும், இவர்களை கரிசிலார்கள் என்று ஒரு சிவஞானி புகழ்ந்திருக்கின்றனர். எப்படியென்றால் இவர் வீதியிற்சென்ற சிவஞானி குற்றமில்லா உணவுகொள்ளும் பொருட்டு இவர்களிடத்தில் கூழின்சேடம் புசித்திருக்கின்றனர். ஆதலால், இவர்கள் பாரம்பரையில் பெரியோர்களை ஆதரிப்பதும், அன்ன தானங்களும், பரோபகாரங்களும், பாபங்கள் எள்ளள வேனுமில்லாத தொழில்களும் ஆசரித்து வருகின்றவர். இன்னும் இவர்கள் பூசை யாதெனில் விசுவேசலிங்கம், விசாலாக்ஷியம்மையும், தீர்த்தம் குச தீர்த்தமும் ஆம். அதேதெனில் தசரத புத்திரசிகா [illegible]ளாகிய குசலவர்கள் என்னுமிருவருள் குசனென்பவன் [illegible] இகலோக பரலோகசாதனத்தைக் கருதி விசாரிக்க முயன்று ஆசாரியராகிய வசிட்ட முனிவரைக் கேட்க அவர் சிறுவனைப்பார்த் துச்சொல்லுகிறார். உனது தந்தையும், அவரது தந்தையும், அவர் களின் முன்னோர்களும் திருவாரூருக்குச் செல்வதும், தங்குவதற்கு

தனி ஆச்சிரமம் வகுத்து அங்கு தங்கியிருப்பதும் உண்டு. அன்றியும், தங்கள் ஆசிரமத்தில் சிவலிங்கத்தாபனமும், தீர்த்தோத்தாரணமும் செய்வதுண்டு என்று அவர் சொல்லக்கேட்டு தூண்டெனெழுந்து தூரிய முழங்கப் பரிவாரத்தோடு விரைவுடன் ஆசிரமம் வந்து வசிட்டமுனிவரை ஆயுமொன்றமைக்கச்செய்து விசுவேசரையும், அம்பாளையும் தாபித்து பரிவாரங்களுடன் பூசைமுடித்து நமஸ்கரித்து நின்றார். அப்பொழுது விசுவேசன் எழுந்தருளி வ சூரியகுல திலக! யாதபேக்ஷை என்னும், சுவாமி இந்தத் தீர்த்தத்தில் சோமவாரத்தில் மூழ்குவோர்க்கு பிரமகத்தியாதி தோஷம்போய் விடுதலும், அனேக ரோகம் தீருதலும் அருள்க. இன்னும் இக்குளம் என் பேரால் விளங்குக. அன்றியும், பெண் ஜாதகம், பிள்ளை ஜாதகம் இரண்டிலுமுள்ள செவ்வாய் தோஷ நிவர்த்தியும் வேண்டுமெனலும், அப்படியே யாகுகவெனப் பூரண வரமளித்தார். அதன் பிறகு கயிலைக்குச்சென்று வணங்கிபூசை முடித்துக்கொண்டு புண்ணிய புரியிற்றங்கி முறைமைய மண்டலபூசை செய்தார்கள். அத்தகைய காட்டூர் என்று தெரிந்த இந்தக் குமார சகோதரர்கள் இப்பதியில் குடிகொண்டிருந்த அநேக சாதுக்கள் பூசையும், விருந்துகளும் தினம் செய்வார்கள். இவர் மனையிலுண்டவர் பெருமை கடம்பவன புராணத்தில் கூறும். ஆகலால் இவர்களுணவு நாமெல்லாம் புசிப்பதவசியமாவதுதான் என்று சொல்லிவருகையில் சூதரானவர் குறு முனிவரைப் பார்த்து அந்தக் குசன் பின்னென்ன செய்தானென, உடனே ராஜபுத்ரன் தங்களாலயத்தைஇவர்களிடம் ஒப்புவித்துச் சென்றனர். அதுமுதல் இவர்கள் பரம்பரையார்களை பாதுகாத்து வாழ்கின்றனர் என்றவுடன் மிக மகிழ்ந்து அகத்தியனும், சூதரிஷியும் ஏனைய பெரியோர்களும் காட்டூரென்று வழங்கும் ஆரண்யபுரி சென்றுவர நினைந்து அங்கிருந்து வந்த புண்ணியசீலருடன் அக்காட்டூரை அடைந்து அங்குள்ள குசதீர்த்தமாடி அவ்விடத்தில் எழுந்தருளி இருக்கும் விஸ்வேச மூர்த்தியையும், அம்பாளையும் வழிபட்டு இறைஞ்சியேத்தி அவ்விடத்தாரையும் புண்ணிய சீலர் இல்லத்தில் போசனமுடித்து பின் சந்தன தாம்பூல தக்ஷிணை பெற்றபிறகு இவர்களைப்பார்த்து இவ்வாலய பூசையும், தீர்த்தம் பாதுகாத்தலும் எக்காலும் விடாதீர்கள், எல்லா நன்மையும் தரும் பரம்பரை விளங்குவீர்களென்று ஆசீர்வதித்துச் சென்றனர். பிறகு காலம் அதிகமானதால் அவ்வாலயம்



[illegible]ம் குளம் குறுகியிருப்பதால் இதனைமுன் போல [illegible]புரங்களும் படித்துறைகளோடு தீர்த்தமும் செய்து முடிக்க முயன்றோம். க்ஷேத்திர பாத்தியம் ஆரூரினாலும், கோவில் பாத்தியம் மகரிஷிகளினாலும், நம்மவர் பாத்தியம் பூர்வீக புண்ணியவான்களாலும் கிடைத்தனவாகும். ஆதலால் இன்னும் இவ்வூரில் நளமகாராஜாவினாலயம், அரிச்சந்திராலயம், திரிசங்கு ஆலயம், தசரதராலயம், இராமராலயம், லவமகாராஜாவாலயம் முதலிய இன்னும் அனந்தம் கோயில்கள் கீழ்க்கிடந்து வீணாகின்றன. ஆகையால் இந்த ஆலயத்தை புதுப்பிக்கவேண்டுமென்று முயலுவதானோம். இத் திருப்பணி அத்தியாவஸ்யம் என்பது திருவாரூர்ப் புராணமும், செய்யுள்களும், நாகர காண்டத்திலுள்ள கிரந்தமும் பின்வருமாறுணர்க.

குறிப்பு :—அங்காரகனெனும் செவ்வாய் விக்கிரகம் இந்தத் தீர்த்தத்தின் பாங்கரேயுள்ளன. மற்றும் ஆலய சிகர மண்டபங்களை படத்தினால் விளக்கியுள்ளனம்.

180520




பரத கண்டத்திலுள்ள எழுநூறுகோடி சிவாலயங்களுக்குள்ளே மிக உத்தமமாயும், பிருதிவிலிங்க சேத்திரமாயும், விராட்புருடனது மூலாதார ஸ்தானமாயும், லெட்சுமிதேவிக்கு இருதய ஸ்தானமாயும் உள்ள திருவாரூரின் மேற்றிசையில் பஞ்சகுரோசத்திற்குட்பட்டதும், வான்மீக இருடியினுடைய ஆச்சிரமமானதும், பிரம்மா முதலியவர்கள் பூஜித்த ஆலயங்களுடையதும், சுந்தரமூர்த்தி யனாராலே பதிகம் பெற்றதுமான ஆரணியபுரமென் ... குசலவர்களாலே திரேதாயுகத்தில் ... து இத்திருக்கோவில்.

OFFICE ... MADRAS ... JUN 1924

-600 028.
180520

K. P. PRESS,
VIJAYAPURAM,
29 Myg.